



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்



நாம் நற்செயல் ஆற்றுவதற்குரிய பிரேரணையை பகவான் அருளுகிறார். நாம் செய்ய விரும்பும் எச்செயலுக்கும் ஓர் உள்ளுணர்வு நம்மை உந்துகிறது. அவ்வாறின்றி நாம் செயல்படுவதில்லை. இந்த உந்துதலை கடவுள் நமக்கு அருளுகிறார். அவன் அருளன்றி நற்செயல்கள் செய்வதிலே நாம் உந்தப்படுவது எங்ஙனம்? நாம் தீய செயல்கள் செய்யும்போது ஏற்படும் உந்துதலுக்குக் காரணம் என்ன? அதுவும் கடவுளால்தான் ஏற்படுகிறது. அவ்வாறானால், நாம் மிகவும் பெரிய நிலையில் வைத்துள்ள கடவுள், நம் பக்திக்கும் வழிபாட்டுக்கும் உரியவரான பகவான் நம்மை தீய செயல்கள் செய்ய ஏன் தூண்ட வேண்டும்? இதற்கு நம் சாஸ்திரங்கள் கூறுவது என்னவெனில்,



“புண்யோ வை புண்யேன கர்மணா பவதி பாப: பாபேன.”

நாம் முற்பிறவியில் செய்த கர்ம பலன்களை அனுபவித்தே தீர வேண்டும். அதற்குரிய பிரேரணைகளை (நல்லதோ, கெட்டதோ) நமக்கு பகவான் அளிக்கிறார். இதற்காகக் கடவுளை நாம் குற்றம் சாட்டவோ, நிந்திக்கவோ முடியாது. இம்மாதிரியாக முற்பிறவியில் செய்த கர்மாக்களின் பலனை இப்பிறவியில் அனுபவிப்பது, இப்பிறவியில் செய்த கர்மங்களின் பலனை அடுத்த பிறவியில் அனுபவிப்பது என்ற இந்தத் தொடர்பு தொன்றுதொட்டே இருந்து வருகிறது. இந்த ஸம்சாரத்தின் தொன்மையை பகவான் வேதவியாஸர் தம்முடைய பிரஹ்ம சூத்திரங்களிலும், ஸ்ரீ சங்கரபகவத்பாதர் இந்த சூத்திரங்களுக்கான தம்முடைய உரையிலும் விளக்கியுள்ளார்கள். ஆகவே, ஸம்சாரமாகிற இந்தத் தொடர் ஓட்டத்திலே, ஒருவன் தனது செயல்களின் பலன்களை அனுபவிப்பது என்பது முறையற்றதாகவோ, சாஸ்திர விரோதமாகவோ ஆகாது. ஆகவே கடவுளின் அருளைப் பெற ஆர்வமாக உள்ள நாம், அந்த கடவுளால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தர்மத்தின் கொள்கைகளைத்தான் கடைப்பிடிக்க வேண்டும். கடவுள் நமக்கு பகுத்தறியும் சக்தியைக் கொடுத்திருக்கிறார். ஆகவே அதைச் சரியான முறையில் உபயோகிப்பது நம் பொறுப்பாகும். அதைச் சரியான முறையில் பயன்படுத்தாவிடில் தவறு நம்முடையதேயாகும்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# விதுர நீதி

धर्मार्थौयः परित्यज्य स्यादिन्द्रियवशानुगः ।
श्रीप्राण धनदारेभ्यः क्षिप्रं स परिहीयते ॥88॥

த⁴ர்மார்தோ²ய: பரித்யஜ்ய ஸ்யாதி³ந்த்³ரியவஶானுக³: |
ஶ்ரீப்ராண த⁴னதா³ரேப்⁴ய: க்ஷிப்ரம்' ஸ பரிஹீயதே ||88||



தர்மத்தையும், நியாயமான பொருள் ஈட்டுதலையும் கைவிட்டு, புலன்களின் வசப்பட்டு வாழ்பவன், அவன் விரைவிலேயே செல்வம், உயிர், பொருள், மனைவி (குடும்ப வாழ்வு) ஆகியவற்றை இழந்துவிடுகிறான்.

असन्त्यागात्पापकृतामपापान् तुल्योदण्डः स्पृशते मिश्रभावात् ।
शुष्केणार्द्र दह्यते मिश्रभावात् तस्मात्पापैस्सहसंधिं न कुर्यात् ॥89॥

அஸந்த்யாகா³த்யாபாபக்ரு'தாமபாபான் துல்யோத³ண்ட³: ஸ்ப்ரு'ஶதே மிஶ்ரபா⁴வாத் |
ஶுஷ்கேணார்த்³ர த³ஹ்யதே மிஶ்ரபா⁴வாத் தஸ்மாத்பாபைஸ்ஸஹஸந்தி⁴ம்' ந குர்யாத் ||89||


பாவம் செய்பவர்களை விட்டு விலகாமல் அவர்களுடன் இருப்பதால், பாவம் செய்யாதவர்களும் அவர்களைப் போலவே தண்டனையை அனுபவிக்க நேரிடுகிறது. உலர்ந்த விறகுடன் சேர்ந்திருப்பதால் ஈரமான விறகும் எரிவதைப் போல, பாவிகளுடன் தொடர்பு கொள்ளக் கூடாது.

अनसूयार्जवंशौचं अन्तोषः प्रियवादिता ।
दमस्सत्यमनायासः न भवन्ति दुरात्मनाम् ॥90॥

அனஸூயார்ஜவம்'ஶௌசம்' அந்தோஷ: ப்ரியவாதி³தா |
த³மஸ்ஸத்யமனாயாஸ: ந ப⁴வந்தி து³ராத்மனாம் ||90||

பொறாமையின்மை, நேர்மை, தூய்மை, மனத்திருப்தி, இனிமையான பேச்சு, புலனடக்கம், உண்மை, அமைதியான இயல்பு ஆகிய இக்குணங்கள் தீய மனமுடையவர்களிடம் இருப்பதில்லை.

(தொடரும்....)


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

**(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ மஹாஸந்நிதானம் ஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)**

## 13. பக்தியில் பல விதம்





கோபிகைப் பெண்கள் பால், தயிர் முதலியவற்றை விற்று பணம் சம்பாதிப்பவர்கள். தங்களது பாத்திரங்களைக் கூடைகளில் வைத்து அவற்றை தலையில் சுமந்தவாறே, "பால், தயிர்.." என்று தெருத்தெருவாகக் கூவிக்கொண்டே செல்வது அவர்கள் வழக்கம். ஒரு நாள் கோபிகாஸ்த்ரீ ஒருத்தி அவ்வாறு சென்று கொண்டிருக்கும். போது, "பால், தயிர்..." என்று கூவுவதற்குப் பதில் "கோவிந்தா, தாமோதரா, மாதவா..." என்று கூவிக்கொண்டே சென்றாளாம். பரமாத்மாவின் பாதகமலங்களில் தன்னுடைய மனதை அர்ப்பணித்து விட்டதால் அவள் வாயிலிருந்து பகவானின் நாமங்களைத் தவிர வேறு வார்த்தைகள் வரவில்லை. இந்தக் காட்சியைப் பார்த்தவர்கள் “என்ன இந்தப் பெண்ணுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா" என்று நினைத்தனர். ஆனால், அவளோ பகவத் விஷயத்தில் தனது மனதைப் பறிகொடுத்திருந்தாள். மஹாபக்தர்களையும் மஹாஞானிகளையும் பார்த்தால், அவர்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதோ என்றுகூடச் சில சமயம் நமக்குத் தோன்றும். ஶ்ரீ ஸதாசிவ பிரஹ்மேந்திரர் வாழ்க்கையில் அப்படியொரு நிகழ்ச்சி நடந்தது.

ஸதாசிவ பிரஹ்மேந்திராள் ஒரு மாபெரும் ஜீவன்முக்தராக விளங்கியவர். அவரது ஸ்திதியைப் பார்த்த சிலர் அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று எண்ணி அவரது குருவிடம் சென்று முறையிட்டனர். அதற்கு அவரது குரு.

**உன்மத்தவத் ஸஞ்சரதீஹ சிஷ்யஸ்-**
**தவேதி லோகஸ்ய வசாம்ஸி ச்ருண்வன் |**
**கித்யன்னுவாசாஸ்ய குரு: புராஹோ**
**உன்மத்ததாமே ந ஹி தாத்ருசீதி ||**

"அவன் ரொம்பக் கொடுத்து வைத்தவன். அவனுக்குப் பிடித்த பைத்தியம் எனக்குப் பிடிக்கவில்லையே என்பதுதான் என் எண்ணம்" என்றாராம்.







## ஸத் ஸம்ப்ரதாயம்


An Unit of the e magazine Voice of Jagadguru)

அத்தகைய உயர்ந்த நிலையில் இருந்தார் ஸதாசிவ பிரஹ்மேந்திரர். இவ்வாறே அந்த கோபிகைப் பெண்ணும், "பால், தயிர்" என்பதற்குப் பதிலாக இறைவனின் திருநாமங்களைக் கூவிக் கொண்டிருந்தாளாம். இறைவனின் திருநாமங்களை உச்சரிப்பதும் ஒரு வகை பக்தியே.

சுக மஹரிஷி, பரீக்ஷித் மன்னனுக்கு பாகவதத்தை சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது அவருடைய வாயிலிருந்து பகவானுடைய திவ்ய லீலைகளைப் பற்றிய பிரசங்கம்தான் வந்ததே ஒழிய வேறு எந்தப் பேச்சும் வரவில்லை. சிலர், தாங்கள் பேசுதல், சாப்பிடுதல், எழுதுதல், நடத்தல் போன்ற எந்தக் காரியங்கள் செய்து கொண்டிருந்தாலும் இறைவனைப் பற்றி எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பர். இதுவும் ஒரு விதமான பக்தியாகும். இறைவனுடைய பாதகமலங்களுக்கு சேவை செய்வது என்பது அடுத்துச் சொல்லப்பட்ட பக்தியாகும். பகவானுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற பாவனையுடனேயே இருப்பர் இப்படிப்பட்ட பக்தர்கள். சிலர் எப்போதும் பூஜை செய்து கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புவர். தொந்தரவு கொடுக்காமல் அவர்களை விட்டு விட்டால் மணிக்கணக்காகப் பூஜை செய்து கொண்டிருப்பர். ஆனால், இதற்கு நேர்மாறாக சிலருக்கு பூஜையில் ஐந்து அல்லது பத்து நிமிடம்கூட அதிகம் உட்கார மனது வராது. புரோஹிதரிடம், "ஸஹஸ்ரநாமத்தை விரைவாகப் படியுங்கள்" என்பர். பூஜை முடிந்து சிறிது நேரத்தில் என்ன காரியம் செய்யப் போகிறார்களோ அதனைப் பற்றியே பூஜை நேரத்திலும் சிந்தனை செய்துகொண்டிருப்பர். ஓர் அரைமணி நேரமாவது பகவானுக்குச் செய்யும் பூஜையில் ஏகாக்ரமாக அமர வேண்டும் என்ற எண்ணமே அவர்களுக்கு வராது. ஆனால், உண்மையான பக்தனுக்கு பூஜையில் எவ்வளவு நேரம் ஆனாலும் அது அவனுக்குத் தெரியாது.

சில பக்தர்களுக்கு எவ்வளவு தடவை பகவத் சன்னிதியில் நமஸ்காரம் செய்தாலும் அவர்களுக்குத் திருப்தியே வராது. இதைப் பார்ப்பவர்களுக்கு, "என்ன! இவன் நமஸ்காரம் செய்து கொண்டேயிருக்கிறானே" என்று தோன்றும். ஆனால், அவர்களுக்கு இவ்விஷயத்தில் 'போதும்' என்ற எண்ணமே வராது. பகவானுக்கு நமஸ்காரங்கள் செய்வதும் ஒரு வகை பக்திதான்.


சிலருக்கு பகவானுக்கு எப்போதும் தாஸனாக இருந்து சேவை செய்ய வேண்டும் என்ற தீர்மானம் இருக்கும். அவர்களுக்கு மற்ற காரியங்களில் அக்கறை இருக்காது. இதற்கு ஓர் உதாரணம் ஸ்ரீ ஆஞ்சனேயர். இராம காரியங்களை எந்நேரமும் எக்காலமும் செய்து கொண்டிருக்க வேண்டும் என்பதுதான் அவரது வாழ்வின் இலட்சியமாக இருந்தது. இவ்விதமாக இருப்பதும் பக்தியின் ஒரு வகை ஆகும்.
(தொடரும் .....)



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்


An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஶ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்


### 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

#### மஹாப்ரக்ஞை - மொழிசார் அறிவாற்றல்




பொதுவாக, மொழிசார் அறிவாற்றல் நான்கு விதங்களில் பயன்படுகிறது. ஆசார்யாளின் விஷயத்தில் இந்த நான்கில் இரண்டு மிகவும் முக்கியமாகிறதால் அவற்றைப் பற்றி மட்டும் பேசுவோம். அந்த இரண்டும் சொல்லாட்சி (rhetoric) மற்றும் விளக்கவுரை (explication) என்பன. சொல்லாட்சி மிகுந்த உரை என்பதன் அடையாளங்கள் இரண்டு - அவை, உரையைக் கேட்பவர்கள் மனதில் “இப்படிச் செய்ய வேண்டும்" என்ற எண்ணத்தை உண்டாக்குவதும் அதற்கேற்ற செயல்பாட்டைத் தூண்டுவதும் என்பன. (இந்த ஆற்றல் ஒரு சில அரசியல் தலைவர்களிடமும் உள்ளது அறிந்ததே; ஆனால் அவர்களுடைய உரை நம்மை எந்த மார்க்கத்தில் வழிப்படுத்துகிறது என்பது வேறு விஷயம்.) சொல்ல வந்த கருத்தைத் தெளிவாக உரைத்தல் விளக்கவுரை ஆகும். இவை இரண்டும் ஆசார்யாள் தமது வாழ்நாளில் செய்த ஆயிரக்கணக்கான அருளுரைகளிலும் அவர் எழுதிய சில கட்டுரைகளிலும் வெளிப்படுவதைப் பார்க்கிறோம்.

ஆசார்யாளின் அருளுரைகளைப் பற்றி ஶ்ரீ வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன் நிர்வாகிகள் ஒரு நூலின் பதிப்புரையில் கூறுவதைப் பார்ப்போம்: “... அவை (ஆசார்யாளின் உபந்யாஸங்கள்) மிகவும் பயனுள்ளதாகவும், ஆழ்ந்த கருத்துகளால் நிரம்பியதாகவும், முற்றிலும் எளிமையான-தாகவும், முழுதும் நடைமுறைக்கு ஒத்துள்ளதாகவும், இடையிடையே விலாப் புடைக்கச் சிரிக்க வைத்திடும் நகைச்சுவை கொண்டதாகவும், கருத்துகளை ஆணித்தரமாகச் சொல்வதாகவும், தேவையில்லாத இடத்திலோ, தேவைக்கு அதிகமாகவோ எந்த ஒரு வார்த்தையோ வாக்கியமோ பிரயோகிக்கப்படாமல், தங்கு தடையற்று அருவி போன்று விளங்குவதாகவும் அமைந்துள்ளன...."









## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

இங்கே சில விஷயங்களைக் கவனிக்க வேண்டும். முதலாவது, ஒரு உரையில் கருத்தாழமும் எளிமையும் ஒருங்கே விளங்க வேண்டுமானால் உரையாற்றுபவருக்குக் கல்வி அறிவு மட்டும் இருந்தால் போதாது. ஒருவர், தாம் கற்றதை எல்லோருக்கும் எளிதில் புரியுமாறு கூறுகிறார் என்றால் அவருள் மொழிசார் அறிவாற்றல் நன்கு விளங்குகிறது என்று முடிவு செய்யலாம். இரண்டாவது, தாம் கற்றதை மனதில் தக்க வைத்துக் கொள்ளும் திறன் இருக்க வேண்டும். அவ்வாறு தக்க வைத்துக் கொண்டவற்றைத் தமது தேவைக்கு ஏற்றவாறு பொருத்தமாகக் கோர்த்துச் சொல்ல வேண்டும். ஆசார்யாளின் அருளுரைகளைக் கேட்கும் போது (அல்லது அவர் எழுதிய கட்டுரைகளைப் படிக்கும் பொழுது) அவர் எவ்வளவு நூல்களில் உள்ள கருத்துக்களைத் தாம் பேசும் விஷயத்துடன் தொடுத்துக் கொடுக்கிறார் என்பது உடனே தெரிவதில்லை. பல இடங்களிலிருந்து பல கருத்துகளைக் கொடுத்திருக்கிறார் என்பது அதைப் பற்றி மீண்டும் சிந்திக்கும் பொழுதே தெரிகிறது. உதாரணமாக ஆசார்யாள் கொடுத்த பதினாறு அருளுரைகளடங்கிய “முத்தி நெறி” என்ற தொகுப்பில் முந்நூற்றுக்கும் மேற்பட்ட மேற்கோள்கள் (சுலோகங்கள், பாஷ்யங்கள் முதலிய நூல்களிலிருந்து மேற்கோள்-களாக எடுக்கப்பட்ட வாக்கியங்கள் முதலியன) உள்ளன. இப்படிப் பல விஷயங்களைப் பல்வேறு இடங்களிலிருந்து எடுத்து அவற்றைக் கோர்வையாகத் தொடுப்பதும் மொழிசார் அறிவாற்றலின் வெளிப்-பாடே.! இதில் மேலும் ஒரு விசேஷம் இருக்கிறது. பொதுவாக ஆசார்யாள் பேசும் பொழுது அந்த உரையின் மையக் கருத்து என்ன என்பதைப் பேசுவதற்கு ஓரிரு நிமிடங்கள் முன்னரே முடிவெடுப்பார். எனவே, ஒவ்வொரு உரைக்கோர்வையும் அந்த இடத்தில் அந்த நேரத்தில் தொடுக்கப்பட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, ஆசார்யாளின் நகைச்சுவை உணர்வு பற்றிய குறிப்பு. இது தொடர்பாக அதே பதிப்புரையில், கேட்பவர்களையும் தொற்றிக் கொள்ளும் ஆசார்யாளின் இயற்கையான சிரிப்பு, அவரது தேனினும் இனிமையான குரல், ஒலியை ஏற்றி இறக்கிப் பாவனைகளைப் பலவாறு வெளிப்படுத்தும் விதம், பேசாமல் பேசும் (வார்த்தைகளின் இடையே) அவர் தரும் நிறுத்தங்கள் இவையெல்லாவற்றையும் அச்சடிக்கப்பட்ட புத்தகத்தில் எவ்வாறு நம்மால் வெளிக்கொணர முடியும்?..." என்று பார்க்கிறோம். மேலே கூறப்படுபவை ஒரு சிறந்த பேச்சாளரிடம் நாம் காணும் பண்புகள். எனினும் இவை நடிகர்கள், நடனக் கலைஞர்கள் முதலியவர்களுக்கும் மிக முக்கியமானவை. கார்ட்னரின் கோட்பாட்டின் அடிப்படையில் இவை உடலியக்கம் சார்ந்த அறிவாற்-றலின் வெளிப்பாடுகள் ஆகும் (இந்த அறிவாற்றலைப் பற்றி அடுத்து பேசவுள்ளோம்). இரண்டு விதமான அறிவாற்றல்கள் சம்பந்தப்பட்டு வெளிப்படும் போது அது ஆளுமைக்கு மேலும் மெருகு சேர்க்கிறது என்பதை இது காட்டுகிறது.

(தொடரும்…..) மிக்க நன்றி : Centre for Brahmavidya


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)


## நீதி மஞ்ஜரீ

### ஶ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்யாயம் 8

### தீவிர பக்தி

வைதிகமோ லௌகிகமோ எந்தக் கார்யமாயிருந்தாலும் அது கைகூடவேண்டுமானால் சிரத்தை மிகவும் அவசியம். ஸம்சயத்திற்கு இடம் கொடுக்காமல் நிச்சயமான நம்பிக்கை வேண்டும். எடுத்த கார்யம் பலிக்குமோ பலிக்காதோ என்று நினைத்து மனதைத் தளரவிடாமல் மிகுந்த ஊக்கத்துடன் நடத்த வேண்டும். புத்திசாலித்தனமோ ஸாமர்த்தியமோ மாத்திரம் இருந்தால் போதாது. சில ஸமயங்களில் அந்த புத்திசாலித்தனமும் ஸாமர்த்தியமுமே சிரத்தையைத் தளர்த்தி விடக் கூடியவையாக ஆகிவிடும்.





வடதேசத்தில் ஒரு ஊரில் சூரன் என்ற கீழ்சாதிக்காரன் ஒருவன் இருந்தான். அவன் நல்ல சரீர பலமுள்ளவன், யோக்கியன், ஸத்தியம் தவறாதவன். யார் பெரியவரோ அவரிடத்தில் தான் வேலை செய்வேன் என்கிற பிடிவாதமுள்ளவனாயிருந்தபடியால், அவனை அவன் பந்துக்கள் அவ்வூர் ஜமீந்தாரிடம் அழைத்துச் சென்று அவரிடம் இருக்கும்படி செய்தார்கள். சில நாட்கள் சென்று அந்த ஜமீந்தார் ராஜனைப் பார்ப்பதற்காகப் போகும்போது தனக்கு காவலாளியாக இந்த சூரனைத் தன்னுடன் அழைத்துச் சென்றார். அங்கே அரசனைப் பேட்டி காணும் போது ஜமீந்தார் தண்டனிட்டு வணங்குவதை சூரன் கவனித்தான். வெளியில் வந்தவுடன் ஜமீந்தாரைப் பார்த்து "நீங்கள் ஏன் அவரை வணங்கினீர்கள்?" என்று கேட்டான். அதற்கு அவர் "நான் வெறும் ஜமீன்தார் தானே. அவர்தான் எனக்கு மேலான அரசன்" என்றார். உடனே சூரன் "அப்படியானால் நான் அவரிடத்தில் தான் வேலைக்கு இருப்பேன். உங்களிடம் இனி இருக்க முடியாது" என்று சொன்னான். ஜமீந்தாருக்கு இவனை விட்டுப் பிரிய இஷ்டமில்லாமல் எவ்வளவோ ஸமாதானங்கள் சொல்லியும் பிரயோஜனப்படாமல் போனவுடன், தானே சிபார்சு செய்து அரண்மனையில் வேலை வாங்கிக் கொடுத்துவிட்டு ஊருக்குத் திரும்பி விட்டார்.

**ஸத் ஸம்ப்ரதாயம்**



An Unit of the e magazine Voice of Jagadguru)

அந்த ராஜனிடம் சூரன் வேலை செய்து கொண்டிருக்கையில் ஒரு ஸமயம் அவர் ஜயப்பூர் மஹாராஜாவைப் பார்க்கப் போனபோது அம்மஹாராஜாவை இந்த ராஜன் வணங்குவதை பார்த்து சூரன் முன்போலவே பிடிவாதம் பிடித்து ஜயப்பூர் அரண்மனையில் வேலைக்கு அமர்ந்துவிட்டான். சில நாட்கள் சென்று அவர் பிருந்தாவனம் போகும்போது இவனையும் அழைத்துச் சென்றார். அங்கே அவர் ஒரு ஆலயத்திற்குள் சென்று வணங்குவதைப் பார்த்தான். அவர் வெளியில் "உள்ளே யாரையோ வணங்கினீர்களே, அவர் உங்களை விடப் பெரியவரோ?" வந்தவுடன் அவரை பார்த்து என்று கேட்டான். "ஆமாம். அவர்தான் பகவான் கோவிந்தஜீ. அவருக்கு மேல் உலகத்தில் யாருமே கிடையாது" என்றார். “அப்படியானால் நான் இனி தங்களிடம் வேலை செய்ய ஸாத்தியமில்லை. எனக்கு அந்த கோவிந்தஜீயின் ஸேவைதான் வேண்டும்" என்றான். மஹாராஜனால் அவனுடைய தீர்மானத்தை மாற்ற முடியாமல் அவனை அந்த ஆலயத்திலேயே வாசற்காப்பானாக நியமிக்கும்படி ஏற்பாடு செய்தார்.

இவ்விதமாக அந்த ஆலயத்தின் வாசலிலேயே காவலாக இருந்து வரும்போது "முன்னுள்ள யஜமானர்களையெல்லாம் அடிக்கடி பார்த்தேனே. இந்தப் புது யஜமானனைப் பார்க்கவே இல்லையே. எனக்கோ கோவிலுக்குள் போய் தரிசனம் செய்ய அதிகாரமில்லை. ஏதேனும் ஒரு தினம் அவர் வெளியில் வந்தால் தான் பார்க்க முடியும்! எப்படியும் அவர் தர்சனம் கிடைக்கும்" என்ற நம்பிக்கையுடன் வேலை பார்த்து வந்தான். ஸ்நானம் செய்யவோ சாப்பிடவோ வேறு கார்யமாகவோ வெளியில் போயிருக்கும் ஸமயம் அவர் வந்துவிட்டால் என்ன செய்வது என்று எல்லாக்கார்யங்களையும் மிகவும் சுருக்கிக் கொண்டான். அவரை தரிசிக்க வேண்டுமென்ற ஆவலே அவனிடம் குடிகொண்டு விட்டபடியால் ஆஹாரமும் நித்திரையும் சரியாக இல்லாமல் சரீரம் மிகவும் மெலிந்து பலஹீனமாகிவிட்டது. ஆனால் அவன் தன் நம்பிக்கையையும் ஊக்கத்தையும் கொஞ்சமேனும் தளரவிடவில்லை. இவ்விதமாக மூன்று வருஷங்கள் சென்றன.

(தொடரும் …) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

Our Mail ID : Info@voiceofjagadguru.com

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ||श्रीशारदास्तोत्रम्||

## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஶ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

**(ஶ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)**

**(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)**

सर्वात्मकत्वमथवा बोधयितुं स्वस्य सर्वलोकानाम् ।
स्वीकुरुषे किं पौरुषमम्बुजसञ्जातमानिनि ब्रूहि ।।73।।



ஸர்வாத்மகத்வமத²வா போ³த⁴யிதும்'
ஸ்வஸ்ய ஸர்வலோகானாம் |
ஸ்வீகுருஷே கிம்'
பௌருஷமம்பு³ஜஸஞ்ஜாதமானினி
ப்³ரூஹி ||73||

எல்லா உலகங்களுக்கும், நீயே அனைத்திற்கும் ஆத்மாவாக இருப்பவள் என்பதை உணர்த்துவதற்காகவோ, தாமரையில் தோன்றிய பிரம்மனாலும் போற்றப்படும் பெருமைமிக்க தேவியே! நீ ஏன் ஆணுருவத்தை (சிவரூபத்தை) ஏற்றுக்கொள்கிறாய்? கூறுவாயாக. (73)

झषौ स्वजातिदोषं किमबलस्वकुलाशनम्।
मातर्निवेदनायाक्षिव्याजात्कर्णसमीपगौ ।।74।।

ஜ²ஷௌ ஸ்வஜாதிதோ³ஷம்' கிமப³லஸ்வகுலாஶனம் |
மாதர்நிவேத³னாயாக்ஷிவ்யாஜாத்கர்ணஸமீபகௌ³ ||74||

மென்மையானவளே! தங்கள் இனத்தையே உண்ணும் குற்றத்தைப் பற்றி, தாயே! (உமது) கண்கள் என்ற சாக்கில், (அந்த இரண்டு மீன்களும்) உமது காதருகே வந்து முறையிடுகின்றனவோ? (74)

अशक्नुवन्स्तोतुमहीश्वरस्त्वन्मुखस्य सौन्दर्यमयं जगाम ।
रसातलं वक्त्रसहस्रतां च निनिन्द कञ्जतभवस्य जाये ।।75।।

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

அஶக்னுவன்ஸ்தோதுமஹீஸ்வரஸ்த்வன்முக²ஸ்ய ஸௌந்த³ர்யமயம்’ ஜகா³ம |
ரஸாதலம்’ வக்த்ரஸஹஸ்ரதாம்’ ச நினிந்த³ கஞ்ஜதப⁴வஸ்ய ஜாயே ||75||

பாம்புகளின் தலைவனான ஆதிசேஷன், உன்னுடைய திருமுகத்தின் அழகை முழுமையாகப் புகழ இயலாமல், ரசாதலத்திற்குச் சென்று, தனக்குள்ள ஆயிரம் முகங்களும் போதவில்லை என்று அவற்றையே குறையாக எண்ணினான், ஓ தேவி! (75)

अशक्नुवन्तस्तव सुन्दरत्वं स्तोतुं महेशाग्निभवाब्जजाताः ।
निनिन्दुरास्येषु हि पञ्चकत्वं षट्त्वं चतुष्ट्वं च गिरां सवित्रि ।।76।।

அஶக்னுவந்தஸ்தவ ஸுந்த³ரத்வம்’ ஸ்தோதும்’ மஹேஶாக்³னிப⁴வாப்³ஜஜாதா: |
நினிந்து³ராஸ்யேஷு ஹி பஞ்சகத்வம்’ ஷட்த்வம்’ சதுஷ்ட்வம்’ ச கி³ராம்’ ஸவித்ரி ||76||

வாக்கின் தாயே! சிவபெருமான், அக்னியில் தோன்றிய ஸ்கந்தன், தாமரையில் பிறந்த பிரம்மன் ஆகியோர் உன்னுடைய பேரழகை முழுமையாகப் புகழ இயலாமல், தங்களுடைய ஐந்து முகங்களையும், ஆறு முகங்களையும், நான்கு முகங்களையும் குறையாகவே எண்ணினர். (76)

नीलोत्पलोत्थः खलु नीलमेघो नम्रास्यमध्यात्कविताप्रवाहम् ।
प्रवर्तयत्याशु वदन्ति चैनं मातस्तवाक्षिप्रभवं कटाक्षम् ।।77।।

நீலோத்பலோத்த²: க²லு நீலமேகோ⁴ நம்ராஸ்யமத்⁴யாத்கவிதாப்ரவாஹம் .
ப்ரவர்தயத்யாஶு வத³ந்தி சைனம்’ மாதஸ்தவாக்ஷிப்ரப⁴வம்’ கடாக்ஷம் ..77..

தாயே! நீலத் தாமரையிலிருந்து தோன்றிய கருநீல மேகம் போலத் தோன்றும் (உன்னுடைய கடைக்கண் பார்வை), குனிந்த முகமுடையவரிடமிருந்து உடனே கவிதையின் பெருவெள்ளத்தைப் பெருக்கெடுக்கச் செய்கிறது. அதனாலேயே, இதனை உன்னுடைய கண்களிலிருந்து தோன்றிய கடைக்கண் அருள்பார்வை என்று ஞானிகள் கூறுகின்றனர். (77)

नीलोत्पले त्वन्नयने हि मातस्तदुत्थमेघः करुणाकटाक्षः ।
स नम्रवक्त्रात्कविताप्रवाहं प्रवर्तयत्याशु न संशयोऽत्र ।।76।।

நீலோத்பலே த்வந்நயனே ஹி மாதஸ்தது³த்த²மேக⁴: கருணாகடாக்ஷ: .
ஸ நம்ரவக்த்ராத்கவிதாப்ரவாஹம்’ ப்ரவர்தயத்யாஶு ந ஸம்’ஶயோ(அ)த்ர ..76..

தாயே! உன்னுடைய கண்கள் நீலத் தாமரைகள் போன்றவை. அவற்றிலிருந்து எழும் கருணைமிகு கடாக்ஷம் கருநீல மேகத்தைப் போன்றதாகும். அந்தக் கருணைக் கடாக்ஷம், பணிவுடையவரின் வாயிலிருந்து உடனே கவிதை வெள்ளத்தைப் பெருக்கெடுக்கச் செய்கிறது; இதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

(தொடரும் …)

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

## பாலகாண்டம்

### நான்காவது ஸர்கம்

தசரதர், "ராமா! ராமா!", "லக்ஷ்மணா!" என்று அன்புடன் அழைத்தார். அவர்களை அணைத்துத் தலையை முகர்ந்து, விஸ்வாமித்திர முனிவரிடம் ஒப்படைத்தார்.



அதன்பின் பராக்கிரமசாலியான விஸ்வாமித்திரர் மிகவும் மகிழ்ந்தார். ராம-லக்ஷ்மணர்களை ஆசீர்வதித்து வாழ்த்தினார். வில், அம்பறாத்தூணி, அம்பு, வாள் ஆகியவற்றை ஏந்தியிருந்த இருவரையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார். சிறிது தூரம் சென்றபின், விஸ்வாமித்திரர் ராமரை அன்புடன் அழைத்தார். தேவர்களால் உருவாக்கப்பட்ட பலா, அதிபலா என்ற இரு மந்திரவித்தைகளையும் அவருக்கு உபதேசித்தார். அந்த இரண்டு வித்யைகளையும் பெற்றவுடன் பசி, தாகம், சோர்வு போன்றவை ஒருபோதும் ஏற்படாது. பின்னர் அவர்கள் கங்கையைக் கடந்து தாடகாவனத்தை அடைந்தனர். அப்போது விஸ்வாமித்திரர் உண்மைப் பராக்கிரமம் உடைய ராமரிடம் கூறினார். இங்கு தாடகை என்ற பெயருடைய, விரும்பிய உருவம் எடுக்கக்கூடிய ராட்சசி இருக்கிறாள். அவள் உலகமக்களைத் துன்புறுத்துகிறாள்; ஆகவே எந்தத் தயக்கமும் இல்லாமல் அவளை வதம் செய்.

"அப்படியே செய்கிறேன்" என்று ராமர் வில்லை எடுத்து நாணேற்றினார். அதனால் எழுந்த வில்லின் நாணொலி காடு முழுவதும் எதிரொலித்தது. அந்த ஒலியைக் கேட்ட பயங்கர வடிவமுடைய தாடகை பொறுக்காமல், கோபத்தில் வெறியுற்று மேகம் பாய்வதைப் போல ராமரை நோக்கிப் பாய்ந்தாள். ராமர் ஒரே அம்பினால் அவளது மார்பில் தாக்கினார். பயங்கரமான தாடகை இரத்தத்தைப் பெரிதும் கக்கிக்கொண்டு காட்டில் விழுந்தாள்.

அதன்பின் மிகவும் அழகான, ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட யக்ஷிணி தோன்றினாள். சாபத்தால் பிசாசு நிலையில் இருந்த அவள், ராமரின் அருளால் சாபவிமோசனம் பெற்றாள். ராமரை வணங்கி, வலம் வந்து, அவருடைய அனுமதியுடன் தெய்வலோகத்திற்குச் சென்றாள். பின்னர் மிகவும்

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

மகிழ்ச்சியடைந்த விஸ்வாமித்திரர், ராமரை அணைத்துத் தலையை முகர்ந்து, சிறிது சிந்தித்தார். அதன்பின் அனைத்து தெய்வீக அஸ்திரங்களையும், அவற்றின் இரகசிய மந்திரங்களோடு, அன்புடன் ராமருக்கு உபதேசித்தார்.

**உமா-மகேசுவரர்களுக்கிடையே நிகழ்ந்த உரையாடலான ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம் பால காண்டத்தில் நான்காவது ஸர்கம் முற்றிற்று.**

(தொடரும்...)

Our Website link : https://www.voiceofjagadguru.com/
Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com


| Editorial Board | | |
|---|---|---|
| Sri P A Murali | Hon' Advisor | Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringeri |
| Sri S N Krishnamurthy | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| Sri Tangirala Shiva Kumara Sharma | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| PujyaSri Swami Guruparananda | Hon' Editor | Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni. |
| Sri B Vijay Anand | Web Director | Coimbatore |
| Smt B Srimathi Veeramani | Web Asst Director & Chief Editor | Tirunelveli |
| K M Kasiviswanathan | Hon' Editor | Tirunelveli |